Chundikuli Branch Library

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL' TAMIL DAILY'

மலர் 88 | வைகாசி 23 | துல்ஹஜ்தா 22 | இதழ 115
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 6-06-1991

கிளிநொச்சியில்

## விமான தாக்குதல் தாயும், மகனும் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று சிறிலங்கா விமானப் படை விமானங்கள் இந்து மகா வித்தியாலயத்தருகில் வீசிய குண்டு வீச்சுத்தாக்குதலினால் தாய், மகன் உட்பட இருவர் பலியாகினர். மாணவன் ஒருவனும் படுகாயத்துக்குள்ளானுர்.

கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயமும் இத்தாக்குதலில் பலத்த சேதமடைந்

(4ம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்கிலும் தாக்குதல்

[காங்கேசன்துறை]

வலி-வடக்கில் நேற்று மூர்க்கத்தனமான முறையில் 2 பொம்மர்கள் மாறிமாறித் தாக்குதல் நடத்தின.

பிற்பகல் 3-00 மணியளவில் 2 பொம்மர்கள் வலி-வடக்குப்

[4ம் பக்கம் பார்க்க]

## எமது தேசிய கலாசாரத்தில் புரட்சிகர மறுமலர்ச்சி உருவாக வேண்டும் - 'பிரபா'



(யாழ்ப்பாணம்)

''மொழி, கலை, கலாசாரம் என்பன ஒரு தேசிய இனத்தின் கட்டமைப்புக்குத் தூண்களாக விளங்குகின்றன; ஒரு தேசியத்தின் ஆன்மாவாக விளங்குகின்றன; ஒரு தேசிய நாகரிகத்திற்கு அத்திபாரமாக அமைகின்றன.''

இவ்வாறு முத்தமிழ் விழாவையொட்டி விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் விடுத்த ஆசிச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

மொழியும், கலையும், கலாசாரமும் வளம்பெற்று, வளர்ச்சியும், உயர்ச்சியும் அடையும்பொழுது, தேசிய இனக் கட்டமைப்பு இறுக்கம் அடைகின்றது. பலம் பெறுகின்றது. தேசிய நாகரிகம் உன்னதமடைகின்றது. மனித வாழ்வும், சமூக உறவுகளும் மேன்மை பெறுகின்றது.

எமது தேசிய இனக் கட்டமைப்பைச் சிதைத்து, இன ரீதியாக எம்மை அழித்துவிட, நீண்ட காலமாகவே எமது எதிரியான சிங்கள இனவாத அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. எமது

(4-ம் பக்கம் பார்க்க)

# மாபெரும் முத்தமிழ் விழா இன்று கோலாகலமாக ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

**விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் மாபெரும் முத்தமிழ் விழா இன்று வியாழக்கிழமை மானிப்பாயில் கோலாகலமாக ஆரம்பமாகிறது.**

இன்று 6ம் திகதி முதல் 8ம் திகதி வரை மானிப்பாயிலும். 9ம், 10ம் திகதிகளில் சாவகச்சேரியிலும், 11ம், 12ம் திகதிகளில் நெல்லியடியிலும், 13, 14, 15ம் திகதிகளில் யாழ். நகரிலும் முத்தமிழ் விழா நடைபெறவுள்ளது.

முத்தமிழ் விழாவையொட்டி தமிழீழம் எங்கும் விழாக் கோலம் பூண்டுள்ளது. வீதிகள் தோறும் அலங்கார வளைவுகள் ரம்மியமாகக் காட்சியளிக்கின்றன. அரங்குகள் தோறும் முத்தமிழ்க் கலை நிகழ்ச்சிகள், வெகு சிறப்பாகத் தமிழர் பண்பாட்டுடன் நடைபெற உள்ளன.

தமிழீழ மக்களின் எழுச்சி நாட்களாகவே இவ்விழா நாட்கள் கருதப்பட்டு, முழு ஏற்பாடுகளும் வெகு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. (சி)

## பிரிட்டிஷ் தூதர் சனி வெளியேறுவார்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ள பிரிட்டிஷ் தூதர் திரு டேவிட் கிளஸ்ரோன் நாளை

[4ம் பக்கம் பார்க்க]

## மானிப்பாய் பகுதியெங்கும் இந்திரலோகமாக காட்சி

(யாழ்ப்பாணம்)

சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் கண்ட 'இந்திர விழா' போன்று இன்று மானிப்பாயில் தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், மக்களும் முத்தமிழுக்கு விழா எடுக்கின்றுர்கள். மானிப்பாய் இந்திரலோகமாக காட்சியளிக்கின்றது.

மானிப்பாய் நகரம் சிவப்பு மஞ்சள் நிற வர்ணக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது அக்கொடிகள் யாவும் ஈழத்தமிழ் மக்களுக்கு நாளை அமையப்போகும் தமிழீழத்துக்கு சாமரைவீசி வரவேற்பது போன்று சோழகக் காற்றில் ஆலவட்டம் வீசுகின்றன.

ஐந்தரை அடி உயரத்திலும் முப்பத்தெட்டடி நீளத்திலும் அமைந்துள்ள 'மாவீரர் கலையரங்க'த்தில் இன்று மாலை முத்தமிழ்விழா ஆரம்பமாகின்றது

மானிப்பாய் சந்தியிலிருந்து கனகசபை வீதி வழியாக செல்லமுத்து அரங்கிற்குப் போகும் வீதிகள் சரிகை மாலைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஐந்தடிக்கொன்றுக

(4ம் பக்கம் பார்க்க]

## ஹெலிகள் தரையிறங்கின

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் குண்டுமாரி பொழிந்தபடி நிற்க, ஆனையிறவு இராணுவ முகாமுக்குள் நேற்று முன்தினம் பல தடவைகள் ஹெலிகொப்டர்கள் இறங்கிச் சென்றன.

[4ம் பக்கம் பார்க்க]

உ

முத்தமிழ் விழா

மானிப்பாய் செல்லமுத்து அரங்கில்
06 - 06 - 1991
ஆரம்பமாகும்

முத்தமிழ் விழா சிறப்பாக நடைபெற
எமது வாழ்த்துக்கள்!

'யாழ். வர்த்தகர் சங்கம்'

சி. நமசிவாயம், செயலாளர் | க. வி. குலரத்தினம் தலைவர்.

(எ-1361)

## பொலிஸ்-ராணுவம் மோதல் 2 பொலிஸார் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவத்தினருக்கும் பொலிசாருக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் இரு பொலிசார் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம், புதிதாக திறக்கப்பட்ட சித்தாண்டி பொலிஸ் நிலையத்தில் ஒரு பொதுமகன் பிடிக்கப்பட்டு பொலிசாரால் சித்திரவதைக்குள்ளானுன். அங்கு வந்த இராணுவத்தினர் இது பற்றி

(4-ம் பக்கம் பார்க்க)

## சோனியா வீட்டு காவலர் சுடப்பட்டு படுகாயம்

[புதுடில்லி]

திரு ராஜீவ் காந்தியின் இல்லத்தில் திருமதி சோனியாவுக்கும் பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு வழங்கும் கடமையில் ஈடுபட்டிருந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுடப்பட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பகவத் சிங் என்ற இந்த சப் இன்ஸ்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மீண்டும் இயங்குகிறது

சாவகச்சேரி கோட்டடுருகில் அமைந்துள்ள திருக்கணித நிலையம் (சோதிடப்பகுதி) காலை 8-30 முதல் 12-30 வரை இயங்குகிறது. வழமை போல் சோதிட. அலுவல்களை செய்துகொள்ளலாம்.

[சி-4815]

### மீராவின் "அக்கினி"

சமூக நாவல் இனவிடுதலையை மையமாக செங்கை ஆழியான் எழுதியது விற்பனையாகின்றது. துர்க்காஸ் ரேசனேர்ஸ், சுன்னுகம், திருக்கணிதம் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும். (சி-4809)

### மாணவன் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன சந்தையில்விமானதாக்குதலினுல்சேதமடைந்திருந்த கட்டடம்ஒன்று இடிந்து வீழ்ந்ததில் அவ்விடத்தில் நின்ற பளையைச் சேர்ந்த 17 வயது மாணவன் லோகநாதன் இன்பநாதன் என்பவர் படுகாயங்களுக்குள்ளாகி யாழ் போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

### கொழும்பு செல்லும் நோயாளர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு செல்வதற்கு கடந்த 3ம் திகதி நோயாளர்களை பதியத்தவறியவர்கள் இன்று 6ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். போதனு வைத்தியசாலை பணிப்பாளர் காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு பணிப்பாளர் டாக்டர் செல்வி புஸ்பா சண்முகம் கேட்டுள்ளார். (56)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## செயற்திட்ட இணைப்பாளர்

அனுபவம் பெற்ற பொறியியலாளர்/தொழில்நுட்ப உத்தியோகத்தர் எமது கிளையினுல் நடாத்தப்படும் வீடமைப்புத்திட்ட வேலைகளுக்குத் தேவை.

தகைமையுள்ளோர் சான்றிதழ்களுடன் 07-06-91 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு நேர்முகப்பரீட்சைக்கு எமது பணிமனையில் சமுகம் அளிக்கவும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை.

(ஏ 1356)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### செல்வி பா. இந்திராகாந்தினி
(தொல்லு)

யாழ்/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
3-ம் ஆண்டு மாணவி)

தோற்றம்: 21-10-1983
மறைவு: 07-05-1991

திதி: 06-06-1991

உமது நினைவால் துயருறும்:
அப்பா, அம்மா, அக்கா,
அண்ணன்மார், சித்தப்பா

57, 5-ம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி 4807)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி ரஜினி பாலசிங்கம்
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி)

மலர்வு: 27-05-1969
உதிர்வு: 31-05-1986

திதி: 06-06-1991

கலைமகளாய் நீ விளங்கி யாவருக்கும்
கல்வியமு தூட்டிடுவாய் என்றிருந்தோம்
மலைமகளாய் நீவிளங்கிப் புவியில் என்றும்
மகிழ்ச்சியதை நிறைத்திடுவாய் என்றிருந்தோம்
குலமகளாய் நீ விளங்கி எமது மனையில்
குலவிளக்கு ஏற்றிடுவாய் என்றிருந்தோம்
எமக்கு மகளாய் நீ விளங்க மறந்ததனுல்
எமைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டாய் மகளே.

உமது பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, தம்பி ரஞ்சித்,
உற்ருர், உறவினர்கள்.

35, குருசோ வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தி. பாலசிங்கம்,
[ரஜினி கிறீம் ஹவுஸ்]
[குவைஸ்] (சி 4817)

# கண்ணீர் அஞ்சலி

அமரர் வைத்திய கலாநிதி

## ஜே. பி. ஷி. பிலிப்ஸ் (ஜே. பி.)



"தலைவர் கலைக்கோவில் நாட்டிய நிறுவனம்"
அவர்களை அபகரித்த காலன் எம்மை அழவைத்தான்

உடல் நோயே டுள்ளமெழு கவலையென்ற
உறுபிணிக்கும் மருந்தூட்டிப் பரிகரிப்பான்
கடலனைய பெருமுளத்தன் கனிவி னுேடே
கலைகளிலே மிகுநயப்புக் கொண்டு காக்கத்
திடமுடனே ஆக்கமுடன் ஊக்கம் ஈவான்
தெய்வநெறி பற்றிநிதம் ஒழுகும் சீலன்
அட கெடுவாய்! கூற்றுவனே! பிலிப்ஸ்ஐ யாவை
அபகரித்துத் தமிழினத்தை அழவைத்தாயே

கலைக்கோவில்
வேல் ஆனந்தன் ஆடற்கலை நிறுவனம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(சி 4810)

ஈழத்தில் 'முத்தமிழ்' வளர்த்தோர் பலருளர்

# சத்து சித்து ஆனந்தம் மூன்றும் தமிழிலேயுண்டு!!

தமிழை இயல், இசை, நாடகம் என மூன்று கூறுக்கி அதற்கு 'முத்தமிழ்' என பெயரிட்டனர் முன்னோர்கள். இது தமிழ் மொழிக்கு உரிய பிற மொழி எதற்குமில்லாத தனிச் சிறப்பு என்று சொல்லப்படுகிறது. தமிழ் மொழிக்கு பல சிறப்புக்கள் உண்டு. அவற்றுள் ஒன்று அதன் பாகுபாட்டு அமைப்பு. இயற்றமிழ் அறிவுக் கூருகவும், இசைத்தமிழ் உணர்ச்சிக்கூருகவும் நாடகத் தமிழ் உடற்கூருகவும் அமைந்திருப்பது சிந்திக்கத்தக்கது. மனிதர்களின் அறிவு; உணர்ச்சி, உடல் ஆகிய முக்கூறுகளும் முத்தமிழாக காட்சியளித்த வண்ணம் இருக்கின்றன.

இயற்றமிழ் சிந்திக்க செய்கிறது. இசைத்தமிழ் உணர வைக்கின்றது. நாடகத்தமிழ் செயல்படத் தூண்டுகிறது.

தமிழ்மொழியில்இம்மூவகை இலககியங்களும் மிகுதியாகவுண்டு. ஆனுல் இலக்கியங்களை ஆராய்ந்தால் நாடக நூல் என்று சொல்லத்தக்க எதுவும் பத்துப்பாட்டிலோ, எட்டுத் தொகையிலோ, பதினெண் கீழ்க்கணக்கிலோ, ஐம்பெரும் காப்பியத்திலோ இடம்பெறவில்லை. ஐம்பெரும் காப்பியத்தில் சிலப்பதிகாரம் மட்டும் நாடகக்காப்பியமாகசொல்லப் படுகின்றது.

நாடகம் முழுவதும் நாடகத்தால்நலம்பெறுகின்றது. இறைவன் சத்து, சித்து ஆனந்தம் என்ற பண்புகளையுடையவன். சத்து-உண்மை, சித்து-அறிவு, ஆனந்தம்-இன்பம். இந்தப் பண்புகள் மூன்றும் தமிழில் அடங்குகின்றன. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில் இயல்-சத்து, இசை-சித்து, நாடகம்-இன்பம்.

சத்து மட்டும் தனித்து நின்றது. இயல். சத்தும் சித்தும் சேர்ந்தவை இசை. சத்து சித்து ஆனந்தம் என்ற மூன்றும் இயைந்தவை நாடகம்.

இயற்றமிழ் அறிஞர் உலகத்தை மட்டும்கவரக்கூடியது. இசை அறிஞர்களுடன் நடுத்தரப்பட்டவர்களையும் கவரக்கூடியது. நாடகம் அறிஞர், அறிஞரல்லாதவர். பாலர் முதியோர், ஆடவர், மகளிர், அனைவரையும் ஈர்த்து மகிழ்ச்சி தரக்கூடியது.

இந்த நாடகத்துச்கு ஆசிரியர் நடராஜப் பெருமான் தான். 'பரம நாடகாசாரி' என்று அருணகிரியார் கூறுகிருர்.

யாழ்ப்பாணத் தமிழ் அரசு பதின்மூன்ரும் நூற்றுண்டிலே தொடங்கியதால் இந்த நூற்றுண்டிலும் அடுத்த நூற்றுண்டுகளிலும் தமிழ் வளர்ச்சி சிறப்பெய்தியது. தமிழ்ச்சங்கமொன்றும் சரசுவதி மகாலயம் என்ற நூல்நிலையமும் யாழ்ப்பாணத்துக்கு பெருமை சேர்த்தன. பிற நாடுகளிலிருந்து தமிழ்ப் புலவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பெருமை சேர்த்தனர்.

பதினைந்தாம் நூற்றுண்டில் குணவீரசிங்கையாரியாரின் ஆட்சிக்காலத்தில், அரசகேசரி மகாகவி காளிதாஸின் இரகு வமிசத்தை தமிழில் இயற்றினுர். இதுவே தமிழில் வெளிவந்த நீண்ட காவியமாகும்.

பதினுரும் நூற்றுண்டிலும் போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில்'கதிர்காமப்பள்ளு' தோன்றியது.

பதினேழாம் நூற்றுண்டு தொடக்கத்திலே சங்கிலியன் ஆண்ட காலத்திலே போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தைத் தமது ஆட்சிக்குட்படுத்தினர். திருநெல்வேலி ஞானப்பிரகாச சுவாமிகள் அந்நியருக்கு அஞ்சி இந்தியா சென்று தமிழ்ப்பணி செய்தார்.

பதினெட்டாம்நூற்றுண்டில் தமிழ்மொழி கண்டி இராச்சியத்தின் அரசாங்க மொழியாக விளங்கியதால் இக்காலத்தில் சின்னத்தம்பிப் புலவர், வரத பண்டிதர், மயில்வாகனப் புலவர், சிற்றம்பலப்புலவர், கூழங்கைத் தம்பிரான் ஆகியோர் இயல் இசை நாடகத் தமிழை செழுமைப்படுத்தினர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டிலும், இருபதாம் நூற்றுண்டிலும் இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்த காலத்தில் ஈழத்தில் தோன்றி முத்தமிழ் வளர்த்தோர் பலருளர். சிறந்த காப்பியங்களை இயற்றினர். பல தனிப் பாடல்களைப் பாடினுர்கள். இலக்கண நூல்களை எழுதினுர்கள். பழந் தமிழ் நூல்களைத் தேடி எடுத்து அச்சிட்டு பரப்பினுர்கள். நவீனங்கள், கதைகள் முதலிய புது வகையான இலக்கிய வடிவங்களை உருவாக்கினுர்கள். நாடகங்களையும், இசைப் பாடல்களையும் நல்கினுர்கள்.

யாழ்ப்பாணத் தமிழை செந்தமிழ் தீந்தமிழ், இலக்கணத்தமிழ், யாழிசைத்தமிழ் என தமிழறிஞர்கள் கூறுவர். இப்பெருமையினை யாழ்ப்பாணத்துக்கு அளித்தவர் பலருளர்.

பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஈழநாட்டுப் புலவர்களே நாடகநூல்களை இயற்றுவதிலே முன்னணியில் திகழ்ந்துள்ளனர். நாவலர் பெருமானுடைய் தந்தையார் கந்தப்பிள்ளை இருபது நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார். அவர் இறக்கும்போதும் இரத்தினவல்லி என்னும் நாடகத்தை எழுதிக்கொண்டிருந்தார். அவர் இறந்தபின் நாவலரே இந்நாடகத்தை எழுதி முடித்தார். அவர் எழுதிய நாடகங்கள் சந்திரகாச நாடகம், இராம விலாசம், கண்டி நாடகம், ஏரோது நாடகம் முதலியன புகழ்பெற்றவை. உடுப்பிட்டிச் சின்னத்தம்பி, இணுவில் சின்னத்தம்பி, மாப்பாண முதலியார், புலோலியூர் கணபதிப்பிள்ளை, இராமலிங்கம் பிள்ளை, கணபதி ஐயர், முத்துக்குமாரபுலவர், தாகேசு ஐயர், முருகேசு ஐயர் ஆகியோர் சிறப்புக்குரியவர்கள்.

- ஐயா சச்சிதானந்தம் -

**யாழ்ப்பாணத் தமிழ்அரசு பதின்மூன்ரும் நூற்றுண்டிலே தொடங்கியதால் இந்த நூற்றுண்டிலும் அடுத்த நூற்றுண்டுகளிலும் தமிழ் வளர்ச்சி] சிறப்பெய்தியது. தமிழ்ச்சங்கமொன்றும், சரசுவதி மகாலயம் என்ற நூல் நிலையமும் யாழ்ப்பாணத்துக்கு பெருமை சேர்த்தன.**

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகத்தினர்
நடாத்தும்

## முத்தமிழ் விழா

## முதல் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: மானிப்பாய் 'மாவீரர் கலையரங்கப்',
நாள்: 06-06-1991 வியாழக்கிழமை
பிற்பகல் 5-30 மணி

5-30 — 6-15 மங்கள இசை

நாதஸ்வரம்: திரு. கே. ஆர். சுந்தரமூர்த்தி
திரு. கே. செல்வரத்தினம்
தவில்: திரு. ராமதாஸ்
திரு. கே. எஸ். கணேசன்

தமிழீழத் தேசிய கொடி ஏற்றம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் திறப்புரை

சிறப்புரை: எழுத்து இலக்கியமாகிறது
உரையாற்றுபவர்; பேராசிரியர் கா சிவத்தம்பி
தலைவர், நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகப்.

இளைஞர் கவியரங்கு

பொருள்: 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்'
தலைவர்: வட்டூர் இளம்கம்பபாரதி
பங்கேற்போர்:
திரு. இணுவை நாக. சிவசிதம்பரம்
திரு. இயக்கச்சி கருணுகரன்
திரு. வவுனியா திலீபன்
திரு. செந்தமிழ்க்கீரன்

'வாத்ய ப்ருந்தா' ராமநாதன் நுண்கலைப்பிரிவினர்
இசை நிகழ்ச்சி

திருமதி நாகேஸ்வரி பிரம்மானந்தா - பாட்டு
செல்வி பாக்கியலட்சுமி நடராஜா - வயலின்
திரு. எஸ். மகேந்திரன் - மிருதங்கம்
செல்வன். கே. துரைராஜா - கஞ்சிரா

வடமராட்சி கலை, பண்பாட்டுக் கழகத்தினர் வழங்கும்
'எழுச்சிப் பாடல்களுக்கான அபிநயம்'

மன்னுர் மாவட்ட விடுதலைப்புலிகள்
மாணவர் அமைப்பினர் வழங்கும்
''எழுந்திடும் உணர்வுகள்'' - நாடகம்

வடமராட்சிப்பகுதி விடுதலைப் புலிகள்
மாணவர் அமைப்பினர் வழங்கும்
'வீரமகன்' நாட்டிய நாடகம்

யாழ் / மயிலன்காடு நடிகமணி கலாமன்றம் வழங்கும்
''பூதத்தம்பி'' இசை நாடகம்

## "தமிழீழப் போராட்டத்திற்கு மக்களின் எழுச்சியைக் கூட்டவே முத்தமிழ் விழா"

- கவிஞர் வாஞ்சிநாதன்

(காங்கேசன்துறை)

''எமது விடுதலைப் போராட்டத்திற்கு மக்களின் பங்களிப்பு அதிகரித்தால் நீண்டு கொண்டே போகும் எமது சுதந்திரப்பயணம் குறுகிவிடும். ஆகவே தான் மக்களின் பங்களிப்பை, எழுச்சியைத் தட்டி எழுப்ப இந்த முத்தமிழ் விழாக்கள் நடைபெறுகின்றன. இவ்விழாக்களைப்பார்த்துரசிப்பதுடன்மட்டும் நின்றுவிடாமல் உணர்வுபூர்வமாகச் செயலில் இறங்க மக்கள் தயாராகவேண்டும்.''

இவ்வாறு உடுவில் ஊராட்சி மன்றத் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற முத்தமிழ் எழுச்சி விழாவில் கலந்துரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் கவிஞர் வாஞ்சிநாதன் கூறினுர்,

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- இன்றைய முத்தமிழ் விழாக்கள் பொழுது போக்குக்காக நடத்தப்படவில்லை எமது பாரம்பரியங்கள், வரலாறுகள் அழிந்து கொண்டிருக்கின்றன. அவற்றினை நாம் நினைவுகூர இவ் விழாக்கள் வழி சமைக்கின்றன.

கலைகள் மக்களை, மக்களின் பிரச்னைகளை, சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிப்பனவாக இருக்கவேண்டும். கலைஞர்கள் மக்களுடன் வாழ்பவர்கள். ஆகவே அவர்கள் மக்களின் கருத்துக்களைக் கலைவடிவில் வெளிக்கொணர முடியும். இந்த மக்களை, அவர்களது தாய்நாட்டை மீட்கும் போராட்டத்திற்குக் கலைகள் மூலம் மேலும் வலு சேர்க்க வேண்டும்.

உலகில் வாழும் 7 கோடி தமிழ் மக்களும் இங்கு ஒரு தமிழீழம் மலராதா; என

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழே! நீ வாழ்க!!

கன்னல் தமிழே வாழியவே!
கவினுர் தமிழே வாழியவே!
மன்னர் மூவர் ஆட்சியிலே
மகிழ்ந்தாய் சிறந்தாய் வாழியவே!

இயலாய் இசையாய் நாடகமாய்
எவரும் போற்ற வாழ்கின்ருய்
உயிராய் உணர்வாய் ஒன்றித்து
எம்மை வளர்த்து வளர்கின்ருய்

சங்கத் தமிழாய்ப் புகழ்பெற்ருய்
சங்கம் மருவ அறம் கற்ருய்
பொங்கிப் பெருகும் பக்தியிசைப்
பாக்கள் பெற்றே சிறப்புற்ருய்

காலம் செய்யும் மாற்றத்தைக்
கவன மாக ஏற்பதனுல்
ஞாலம் வியக்கும் சிறப்புடையாய்
நன்மைத் தமிழே வாழியவே!

அன்பை வளர்த்தல் உன் தொழிலாம்
அறிவே என்றும் உன் எழிலாம்
பண்பே நிலைத்த உன்னுயிராம்
பசுமைத் தமிழே வாழியவே!!

பா. மகாலிங்கசிவம்

## நிர்வாக உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்கு எம்மால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுள்ளோர் 11-06-91-க்கு முன்பு தகைமைச் சான்றிதழ்களுடன் (பிரதி) விண்ணப்பிக்கவும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை.

(ஏ 1355)

## கணக்கியலாளர்

மேற்படி பதவிக்கு எம்மால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுள்ளோர் 11-06-91-க்கு முன்பு தகைமைச் சான்றிதழ்களுடன் (பிரதி) விண்ணப்பிக்கவும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை.

(ஏ 1357)

# எமது தேசிய கலாசாரத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மொழியை அழித்து, எமது கலை, கலாசாரத்தைச் சீரழித்து, எமது வரலாற்றைத் திரித்து, எமது பொருளாதார வாழ்வைச் சீர்குலைத்து, காலம் காலமாக நாம் வாழ்ந்துவந்த தாயகப் பூமியை ஆக்கிரமித்து ஒட்டுமொத்தத்தில் எமதுதேசியக் கட்டமைப்பைச் சிதைத்துவிட எதிரி கங்கணங்கட்டி நிற்கிறான்.

இந்த இன ஒழிப்புத்திட்டத்தின் பூதாகரமான வடிவமாகவே இன்றைய யுத்தம் எமது மக்களுக்கு எதிராக ஏவப்பட்டிருக்கிறது. இந்த இக்கட்டான காலகட்டத்தில் எமது இனத்தின் தேசிய கட்டமைப்பு சீர்குலையாது பாதுகாப்பது எமது விடுதலைப் போராட்டத்தின் பிரதான இலட்சியமாக அமைய வேண்டும். இந்த நோக்கில் எமது தேசியத்தின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் கட்டுக்கோப்புக்கும் முதுகெலும்பாகவுள்ள எமது மொழி, கலை, கலாசாரம் பாதுகாக்கப்படவேண்டும்; பேணி வளர்க்கப்படவேண்டும்.

இந்த வரலாற்றுத் தேவையை நன்கு உணர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கலை, கலாசார பிரிவினர் முத்தமிழ் விழா ஒன்றினை பெரிய அளவில் அரங்கேற்ற இருப்பது எனக்கு பெரு மகிழ்ச்சியை தருகிறது.

இந்த முத்தமிழ் விழா எமது தாயகத்தின் வளர்ச்சிக்கும் எமது தேசியத்தின் எழுச்சிக்கும் முனைப்பூட்டுவதாக அமையுமென நம்புகிறேன்.

இந்த நிகழ்வு எமது தேசிய கலாசாரத்தில் ஒரு புரட்சிகரமான மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டுமென்பதே எனது விருப்பம். நான் கலை, இலக்கியங்களை மதிப்பவன், ரசிப்பவன். கலை, இலக்கிய படைப்பாளிகளை கௌரவிப்பவன் கலை, கலைக்காக இல்லாமல் மக்களுக்காகவே படைக்கப்பட வேண்டுமென்ற கருத்தைக் கொண்டவன்.

கலை, இலக்கியப் படைப்புக்கள் மக்களை சிந்திக்க தூண்ட வேண்டும். பழமையிலும் பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைப்பட்டுக் கிடக்கும் மக்கள் மனதில் புரட்சிகர பார்வையை தோற்றிவிக்க வேண்டும். மாறிவரும் சமூக புறநடைகளுக்கு ஒத்திசைவாக சமூக விழிப்புணர்வை உருவாக்கவேண்டும்.

நாம் இன்று ஒரு புரட்சிகரமான யுகத்தில் வாழ்கிறோம். பூகம்பமான மாற்றங்கள் உருவாகிவரும் புதிய தொரு சகாப்தத்தில் வாழ்கின்றோம். தமிழீழ மக்கள் இன்று விடுதலைவேண்டி போர்க்கோலம் பூண்டு நிற்கிறார்கள். எமது தேசிய வாழ்வின் சகல பரிமாணங்களிலும் வியாபித்து நிற்கும் ஒரு வரலாற்று இயக்கத்திலிருந்து கலைஞர்களும் அறிஞர்களும் அந்நியப்பட்டு நிற்க முடியாது. அப்படி அந்நியப்படுவது மக்களிலிருந்தும், வாழ்க்கை நிதர்சனத்திலிருந்தும் அந்நியப்படுவதாக முடியும்.

இந்தக் காலகட்டத்தில் கலைஞர்கள், எழுத்தாளர்கள் அறிஞர்களிடமிருந்து நான் கூடியளவு பங்களிப்பை எதிர்பார்க்கிறேன்.

ஒரு தாயகத்தைக் கட்டி எழுப்பும் பணி புனிதமானது. இந்தப் புனிதபணியில் பங்கு கொள்வது எல்லோரதுதேசிய கடன். ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகிவரும் எமது தாயகத்தைஒரு உன்னதமான, மேன்மையான சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும்,

இந்தச் சமுதாய மாற்றத்திற்கு வழிகோலும் வகையில் சிந்தனையாளர்களும் சிருஷ்டி கர்த்தாக்களும் எமது இயக்கத்திற்கு பக்கபலமாக நின்று பணியாற்றவேண்டும்.

இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப வரலாற்று ஓட்டத்திற்கமைய கலை இலக்கியகர்த்தாக்கள்புதுமையான, புரட்சிகரமான படைப்புக்களை சிருஷ்டிக்கவேண்டும். இந்தப் படைப்புக்கள் எமது புனித விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டுவதாக அமைய வேண்டும். சமூக புரட்சிக்கு வித்திடுவதாக அமையவேண்டும்.

சமூகப் புரட்சி என்பது, கலாசார மறுமலர்ச்சியை உள்ளடக்கியதாக முன்னெடுக்கப் படவேண்டும் என்பதே எனது கருத்து. சமூகப் புறநிலையில் மாற்றம் ஏற்படும்போது அகநிலையிலும் மாற்றம் ஏற்படுவது அவசியமானது. பழைய முரண்பாடுகள் நிறைந்த சமூக உறவுகளை உடைத்தெறிந்து புதிய சமூக உறவுகளைக் கட்டி எழுப்பும்போது இந்தச் சமூக மாற்றத்திற்கேற்ப மக்களின் மன உலகிலும் ஒரு புரட்சி நிகழவேண்டும்.

புதிய சமுதாயத்தில் புதிய உறவுகளைக் கொண்ட ஒரு புதிய வாழ்க்கையைத் தழுவும் மக்கள். ஒரு புரட்சிகரமான உலகப் பார்வையைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். இங்குதான் கலாசார மறுமலர்ச்சி முக்கியமாகிறது.

கலாசாரம் உயர்நிலை எய்தும் பொழுதே ஒரு இனம் மகிமை பெறுகிறது. மனித வாழ்வு உன்தனம் பெறுகிறது. மனிதம் வளர்ச்சி பெறுகிறது. கலாசாரம் உயர்நிலை பெறுவதாயின் கலாசார மறுமலர்ச்சி அவசியம். கலாசார புரட்சி அவசியம்.

மிகத் தொன்மை வாய்ந்த நீண்டவரலாறு உடைய எந்த ஒரு கலாசாரத்திலும் பழைமைவாத கருத்துக்களும் பாதைகளும் காலத்துக்கொவ்வாத வழக்குகளும் சம்பிரதாயங்களும் மூட நம்பிக்கைகளும் வேரூன்றி இருப்பது இயல்பு. எமது கலாசாரமும் இதற்கு விதிவிலக்கல்ல. கலாசாரம் என்ற கோலத்தில் எமது சமூக வாழ்வில் ஊடுருவி நிற்கும் பிற்போக்கான பண்புகளை, வழக்குகளை, கருத்தோட்டங்களை நாம் இனம் கண்டு களைதல் அவசியம்.

பழையன கழிந்து புதியன சேர்ந்து செழுமைப்படும் கலை, கலாசாரம் பண்பாடு எமது இனத்திற்கு பெருமை சேர்க்கும். எமதுமக்கள் மன உலகில் ஒரு புரட்சிகரமான விழிப்புணர்வை தோற்றுவிக்கும்

இந்தப் புரட்சிகரமான கலாசார பணிக்கு முத்தமிழ் விழா ஒரு முன்னோடியாக அமையுமென நான் நம்புகின்றேன் விழா சிறக்கவும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுபிரிவினர் பணிகள் வளரவும் என் ஆசியும் ஆதரவும் என்றும் உண்டு. (பூ)


## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வரைவுள்ளது) சுன்னாகம்

## முக்கிய அறிவித்தல்

சுன்னாகம் கிராமிய வங்கி வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும்,

எமது சுன்னாகம் கிராமிய வங்கியின் வாடிக்கையாளர்கள் அனைவரும் சங்கத்தின் நலனையும், தங்கள் கணக்குகளின் நலனையும் கருதி, பின்வரும் திகதிகளில் குறிப்பிட்ட ஒழுங்கின்படி கிராமிய வங்கிக்கு தங்கள் கிராமிய வங்கிக் கையேடுகளுடன் வருகைதந்து, தங்கள் மீதிகளைச் சரிபார்த்துச் செல்லும்படி இத்தால் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன், இது சம்பந்தமாக தங்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு மன்னிப்புக் கோருகின்றேன்.

மேலும், கிராமிய வங்கிக்கு வருகை தந்து மீதியைச் சரிபார்க்காதவிடத்து, எமது பேரேடு காட்டும் மீதி சரியானது எனக்கருதி மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், இத்தால் தங்கள் கவனத்திற்கு அறியத் தருகின்றேன்.

6-6-91 காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணிவரை.
ஓய்வூதியக்கணக்குஇலக்கம் - 10001 - 10350வரை.
கணக்கு இலக்கம் - 5001 - 5200 வரை.

7-6-91 காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணிவரை.
கணக்கு இலக்கம் - 0001 - 600 வரை.

8-6-91 காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணிவரை.
நிரந்தர சேமிப்பு க/கு இல; - 20016 - 20030 வரை.
நுகர்ச்சிக்கடன் கணக்குகள் - 15001 - 15100 வரை.

தவிர்க்க முடியாத காரணங்களினால் குறித்த திகதிகளில் சமூகமளிக்கத் தவறுவோர் 10-06-91 திங்கட்கிழமை காலை 9-00 மணி முதல் மாலை 5 00 மணி வரை கிராமிய வங்கிக்கு சமுகமளித்து, கணக்குகளைச் சரிபார்க்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நன்றி.

(சி. குமரவேல்)
தலைவர்.

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
91-06-05.

(சி 1360)


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63.ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 6ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/108306/81.

## ஹெலிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

இப்படியாக அவ்ரோ குண்டு வீச்சு விமான தாக்குதல்களுடன் காலையிலிருந்து மூன்று முறை ஹெலிகள் இறங்கிச் சென்றன. (பூ)

## கிளிநொச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

நேற்றுக்காலை 11-00 மணியளவில் இரு பொம்மர்கள் இத்தாக்குதலை மேற்கொண்டன. இதில் தாய் இராசரட்ணம் கிறிஸ்கா [36 வயது] மகன் நிரோஷன் ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர். மாணவன் சத்தியமூர்த்தி காயமடைந்தார். (பூ)

# புலிகள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

''இன்று 06-ம் திகதி தொடக்கம் 15-ம் திகதி வரை யாழ். மாவட்டத்தில் நடைபெறும் மாபெரும் முத்தமிழ் விழாவை முன்னிட்டு யாழ்.குடாநாட்டில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் இந்நாட்களில் மூடி முத்தமிழ் விழாவிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தனியார் கல்வி நிறுவனங்களை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கேட்டுள்ளது.

## வலி. வடக்கிலும்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியைப் பலமுறை வட்டமிட்ட பின்னர், கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் 4 குண்டுகளை வீசின. மீண்டும் 3-30 மணியளவில் வந்த 2 பொம்மர்களும் கட்டுவன், குரும்பசிட்டி, குப்பிளான் பகுதிகளில் 4 குண்டுகளை வீசின.

மேற்படி பொம்மர்களின் தாக்குதலால் பல வீடுகள், கட்டடங்கள் பெரும் சேதமுற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (86)

## தமிழீழப்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஏங்கிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் நாம் முழுமையாக ஒன்றுபட்டு எமது விடுதலையை முன்னெடுக்கும் நிலை இன்னமும் ஏற்படவில்லை. ஆயுதங்கள் போதியளவு உண்டு. ஆனால் அவற்றை ஏந்த ஆட்கள் இல்லை. ஆகவே இப் போராட்டத்துக்கு மக்கள் தமது முழுமையான பங்களிப்பை, 'பலத்தைத் தர வேண்டும். அப்போது தான் தமிழீழம் மலரமுடியும்'' என்றார். (86)

## மானிப்பாய்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டப்பட்டிருக்கும் கம்பங்களில் 'ரியூப்' பல்புகள் இரண்டாயிரத்துக்குமேல் போடப்பட்டுள்ளன. வீதியின் இரு மருங்கிலும் முத்தமிழ் விழாவிற்கு வரும் மக்களுக்கு வழி காட்டியாக தொண்டர்கள் அணிவகுத்து நிற்பார்கள்.

மேடையின் வடக்குப்பக்கமாக மாபெரும் 'சிகரம்' கட்டப்பட்டுள்ளது. அதற்கு நேர் எதிர் கிழக்கே ஒரு சப்பறமும், மேடைக்குக் கிழக்கே இன்னொரு சப்பறமும் காட்சியளிக்கின்றன.

'தமிழுக்கு அமுதென்றுபேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்' என்று கூறிய பாரதிதாசன் நூற்றுண்டு விழாக் காணும் இந்த வருடத்தில், மானிப்பாய் மாவீரர் கலையரங்கத்தில் நாடகம், நடனம், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகள் நடக்க ஏற்பாடாகியுள்ளன.

ஏறக்குறைய ஒரு லட்சத்துக்குமேல் மக்கள்பங்கு பற்றக்கூடியதாகஅமைந்துள்ள அரங்கில்பார்வையாளர் வசதிகருதி மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுகாதார வசதிகளை செஞ்சிலுவைச் சங்கத்தினர் பொறுப்பேற்றுள்ளனர். குடிதண்ணீர் ஒழுங்குகளை யாழ். மாநகர சபையினர் பொறுப்பேற்றுள்ளனர். [152-56]

## வீர மரணம்

[திருகோணமலை]

திருமலை மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை எதிர் பாராத விதமாக காயமடைந்திருந்த லெப்.மன்னன் (நடேச குரு உமாகாந்தன் திருமலை) வீரமரணமடைந்தார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் உன்னிச்சை இராணுவ முகாம் படையினருக்கும புலிகளுக்கும்இடையில் ஏற்பட்டமோதலில் காயமடைந்தஜெயராஜ் மட்டுநகர்நேற்று முன்தினம் வீரமரணமடைந்தார். (பூ)

## 3 சடலங்கள் கரையொதுங்கின

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை கடற்கரையில் மூன்று சடலங்கள் கரை ஒதுங்கி இருப்பதாக தெரிய வருகிறது.

இச்சடலங்களுள் இரண்டு இளம் பெண்களுடையது என்றும் ஒரு சடலம் வயோதிப பெண்ணினுடையது என்றும் தெரியவருகிறது.

## பொலிஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரித்ததில் ஏற்பட்ட சச்சரவு இறுதியில் துப்பாக்கிச் சண்டையில் முடிந்தது.

இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் இரு பொலிசார் கொல்லப்பட்டனர். ஏனையோர் ஓடிவிட்டனர். கைதான பொதுமகன் விடுதலை செய்யப்பட்டார். [பூ)

## சோனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெக்டர் படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரை கொலை செய்யும் நோக்கில் சுட்டவர்கள் தப்பி விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-சி)

## பிரிட்டிஷ்

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

மறுதினம் சனிக்கிழமை பிரிட்டன் திரும்புவார்.

இதற்கிடையில் பிரிட்டிஷ் தூதரை வெளியேற்றுவது தொடர்பாக மறுபரிசீலனை செய்யுமாறு 'பாராளுமன்றக் குழு' விடுத்த கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டது.

இத்தகவலை வெளிநாட்டு அமைச்சர் திரு. ஹரோல் ஹேரத் பாராளுமன்றில் தெரிவித்தார். (க-சி)


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கந்தையா

(காரைநகர்)

காரைநகர், பயரிக்கூடலைச் சேர்ந்த ஆறுமுகம் கந்தையா 29-4-91 திங்கட்கிழமை காரைநகரில் சிவபதமடைந்து விட்டார். அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி சுந்தரம் தம்பிராசாவின் (ஓவசியர்) தம்பியும், நவரட்ணராஜா (லண்டன்), கோமளம் (லோகேஸ்வரி) அதிபர், சரஸ்வதி ம. வி., வேதாரணியம்மா (வேதம்) ஆகியோரின் தகப்பனும், சுசீலா (லண்டன்), அம்பலவாணர் (ஆசிரியர்), நரேந்திரன் (சுந்தரன்) கொழும்பு ஆகியோரின் மாமனும், குமரன், சாம்பவி (லண்டன்), பிரிந்தா, சுகந்தா, ஜயந்தா மகேந்திரன் ஆகியோரின் பேரனுமாவார். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. அம்பலவாணர்.

அராலி தெற்கு.
வட்டுக்கோட்டை.

(சி- 4814)